**தமிழ்நாடு அரசு**
**சுருக்கம்**

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் - கடன் திட்டங்கள் மாவட்ட அளவில் நுணுகித் திட்டமிடல் - கழக நிதியை மாவட்ட ஆட்சியர்களுக்குப் பகிர்ந்தளித்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை**

**அரசு ஆணை (நிலை) எண்.9**
**நாள்:6.3.2003**

**படிக்கப்பட்டது:**

1. அரசு ஆணை (நிலை) எண்.61, பிற்படுத்தப்பட்டோர் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 1.7.99

2. அரசு ஆணை (ப) எண்.223, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை நாள் 20.8.99(கூ, உ (ம) நு.பா.துறையின் கடித எண்.36295/99-1 நாள் 11.11.99-இல் திருத்தம் வெளியிடப்பட்டவாறு)

3. அரசு ஆணை (நிலை) எண்.53, பிற்படுத்தப்பட்டோர் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 22.11.2002

4. அரசு நே.மு.க.எண்.12333/சிநஆபி/2002-1 நாள் 16.12.2002

5. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநரின் கடித எண்.அ3/1820/2002 நாள் 16.12.2002 மற்றும் 23.12.2002.

------

ஆணை:

முதலாவதாகச் சொல்லப்பட்ட ஆணையின்படி இம்மாநிலத்தில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினரின் பொருளாதார மேம்பாட்டிற்காக ஒரே நிறுவனமாக இயங்கி வந்த தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திலிருந்து தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் என்று தனியே பிரிக்கப்பட்டு

சிறுபான்மையினரின் சுய வேலை வாய்ப்பிற்கு கடனுதவி அளித்து வருகிறது. நகரக் கூட்டுறவு வங்கிகள் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள், மாவட்ட மையக் கூட்டுறவு வங்கிகள் முதலிய வங்கிகள் கடன் வழங்குவதற்கு கழகத்தின் முகவர்களாகச் செயல்பட்டு வருகின்றன. மூன்றாவதாகச் சொல்லப் பட்ட அரசாணையில் 1000 இசுலாமிய இளைஞர்களுக்கு தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி அளித்து ஒருவருக்கு ரூ.25000/- வீதம் ரூ.250 இலட்சத்தை தேசிய சிறுபான்மையினர் மேம்பாடு மற்றும் நிதிக் கழகத்திடமிருந்து பெற்று கடனுதவி அளிப்பதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. டிசம்பர் 2002இல் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திடமுள்ள நிதியை சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கு ஏதுவாக, மாவட்ட அளவில் நுணுகித் திட்டமிடும் வகையில் மாவட்ட ஆட்சியர்களுக்கு அதனைப் பகிர்ந்தளிப்பது தொடர்பான செயற்குறிப்பினை பார்வை 5-இல் உள்ள கடிதங்களில் கழக மேலாண்மை இயக்குநர் அனுப்பியுள்ளார். அதனைச் சீரிய முறையில் பரிசீலனை செய்து அரசு பின்வருமாறு ஆணையிடுகிறது:-

(i) தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் நிதி மாவட்டங்களிலுள்ள மைய கூட்டுறவு வங்கிகளுக்கு வைப்புத் தொகையாகப் பிரித்தளிக்கப்படும். இந்நிதியை தற்போது தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தால் செயல்படுத்தப்பட்டு வரும் தனி நபர் கடன் திட்டங்களுக்கும், 1000 இஸ்லாமிய இளைஞர்களுக்கு கடனுதவி வழங்கும் திட்டத்திற்கும் மாவட்ட ஆட்சியர்கள் பயன்படுத்துவர். தற்போது மேற்படி கழகத்திடமுள்ள நிதி ரூ.70 இலட்சம் முதல் தவணை நிதியாக இணைப்பில் கண்டபடி உடனடியாகப் பிரித்தளிக்கப்படும். இதைப் பயன்படுத்தியவுடன் தேசிய சிறுபான்மையினர் மேம்பாடு மற்றும் நிதிக் கழகத்திடமிருந்து பெறப்படவுள்ள உதவி நிதித் தொகை மாவட்டங்களின் தேவைகளைக் கணக்கிற்கொண்டு பிரித்தளிக்கப்படும்.

(ii) தற்போதுள்ள ஒவ்வொரு மாவட்ட தேர்வுக் குழுவும் பின்வரும் அலுவலர்களைக் கொண்டு மாவட்ட தேர்வு மற்றும் ஆய்வுக் குழுக்களாக மாற்றியமைக்கப்படும்.

| | |
|---|---|
| அ) மாவட்ட ஆட்சியர் | தலைவர் |
| ஆ) தனி அலுவலர், மாவட்ட மைய கூட்டுறவு வங்கி | உறுப்பினர் |
| இ) சம்பந்தப்பட்ட வங்கியின் மேலாண்மை இயக்குநர் / தனி அலுவலர் அல்லது தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியை பொறுத்தவரை சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர் | உறுப்பினர் |
| ஈ) மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் | உறுப்பினர் மற்றும் ஒருங்கிணைப்பாளர் |

(iii) மாவட்ட ஆட்சியர், மாவட்ட தேர்வு மற்றும் ஆய்வுக் குழுவின் தலைவர் என்கிற முறையில், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழக நிதியினை சிறுபான்மையினர் பயன்பெறும் வகையில் பயன்படுத்த ஏதுவாக குழுவின் இதர உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்து அனைத்து முடிவுகளையும் எடுப்பார். மாவட்டக் குழுவினால் தெரிந்தெடுக்கப்படும்

பயனாளிகளுக்கு கூட்டுறவு வங்கிகளால் கடன் தொகை வழங்கப்படுவதை உறுதி செய்வதுடன் இது தொடர்பான அறிக்கையை குழுவிற்கு கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் அனுப்ப வேண்டும். தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத் திட்டங்களுக்காக மாவட்ட மைய கூட்டுறவு வங்கிகளில் பயன்படுத்துவதற்காக வைக்கப்பட்டுள்ள நிதி நிலையினைத் தெரிவித்து அக்கூட்டுறவு வங்கிகளின் தனி அலுவலர்கள் மாவட்டக் குழுவிற்கு காலமுறை அறிக்கை அனுப்புவதுடன் அதன் நகலை தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கும் அனுப்ப வேண்டும். கடன் தேவை குறித்து மாவட்ட ஆட்சியரிடமிருந்து கோரிக்கை பெறப்பட்டதும் மாவட்ட மைய கூட்டுறவு வங்கிகள் சம்பந்தப்பட்ட கூட்டுறவு வங்கிகளுக்கு தேவைப்படும் நிதியினை மாற்றம் செய்வதுடன் இதுபற்றி தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்குத் தகவல் தெரிவிக்கும். இக்கூட்டுறவு வங்கிகள் தங்கள் சொந்த நிதியைக் கூட சிறுபான்மையினரின் கடன் திட்டங்களுக்கு தேசிய சிறுபான்மையினர் மேம்பாடு மற்றும் நிதிக் கழகத்தின் வரைமுறைகளின்படி பயன்படுத்திவிட்டு மாவட்ட ஆட்சியர் / குழுத் தலைவரின் இசைவுடன் மாவட்ட மையக் கூட்டுறவு வங்கிகளிலிருந்து அதற்கீடான தொகையைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். கணக்குளைச் சரியாகப் பராமரிக்க ஏதுவாக சம்பந்தப்பட்ட கூட்டுறவு வங்கிகள் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்குப் படிவம்-'கி'வை அனுப்புவதுடன் நடப்பிலுள்ள வழக்கப்படி ஒப்பந்த அறிக்கையிலும் கையெழுத்திட வேண்டும். கூட்டுறவு வங்கிகளுக்கு மாற்றப்பட்ட தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழக நிதி தொடர்பாக அவ்வங்கிகளால் மேற்காணும் நடைமுறைகள் பின்பற்றப்படுவதை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் திருப்திப்படுத்திக் கொள்ளலாம். தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்குக் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்துவதைப் பொறுத்தவரை அரசு ஆணை (நிலை) எண்.223, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை நாள் 20.8.99-இல் வெளியிடப்பட்டுள்ள வரைமுறைகள் / நிபந்தனைகள் மற்றும் அக்கழகக் கடனைத் திருப்பிச் செலுத்துவது குறித்த கழகத்தின் தற்போதைய நடைமுறைகள் தொடர்ந்து பின்பற்றப்படும். கடன் வழங்கும் வங்கிகளிடமிருந்து படிவம் -'கி' மற்றும் ஒப்பந்த அறிக்கை பெறப்பட்டவுடன் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்த வேண்டிய கால அட்டவணையைத் தெரிவிக்கும்.

(iv) 1000 இஸ்லாமிய இளைஞர்களுக்கு தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்க பயனாளிகளைத் தெரிவு செய்வதைப் பொறுத்தவரை அரசு ஆணை (நிலை) எண்.53, பிற்படுத்தப்பட்டோர் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை நாள் 22.11.2002-இல் அமைக்கப்பட்ட குழுவால் செய்யப்பட்ட தேர்வு, இவ்வரசாணையில் அமைக்கப்படும் மாவட்டத் தேர்வு மற்றும் ஆய்வுக் குழுவால் செய்யப்பட்ட தேர்வாகக் கருதப்படும்.

3. தேசிய சிறுபான்மையினர் மேம்பாடு மற்றும் நிதிக் கழகத்திடமிருந்து பெறப்படும் கடனுதவியை வரையறை செய்யப்பட்டுள்ள கால வரம்பிற்குள் பயன்படுத்தத் தவறினால் கூடுதல் வட்டி / தண்ட வட்டி செலுத்த நேரிடும் என்பதைக் கருத்தில் கொண்டு இத்திட்டத்தினை விரைந்து செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

4. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலுடன் (அ. சா. எண். 5607 / தி.ஷி./றி/ /2002, நாள் 26.12.2002) வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே.எஸ்.ஸ்ரீபதி,
அரசு செயலாளர்.

பெறுநர்

அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்,
807 அண்ணா சாலை, சென்னை-2.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை-18.(பெயரில்.)
மாநிலக் கணக்காயர், சென்னை.35 (பெயரில்)
மாநிலக் கணக்காயர்,சென்னை.6
சம்பளக் கணக்கு அலுவர்(கிழக்கு), சென்னை-5.

நகல்:

நிதி (ச.ந)துறை,சென்னை-9.
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை,
சென்னை-9.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்,
807 அண்ணா சாலை, சென்னை-2.
பி.மி.பி.(ம).சி.நலத்(சிந) துறை, சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்

இணைப்பு

| வ.எண். | மாவட்டம் | மொத்த ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) | முதல் தவணை ஒதுக்கீடு |
|---|---|---|---|
| 1. | கோயம்பத்தூர் | 40 | 5 |
| 2. | வேலூர் | 40 | 5 |
| 3. | திருநெல்வேலி | 18 | 3 |
| 4. | தூத்துக்குடி | 18 | 3 |
| 5. | திருச்சிராப்பள்ளி | 18 | 3 |
| 6. | இராமநாதபுரம் | 18 | 3 |
| 7. | கன்னியாகுமரி | 18 | 4 |
| 8. | தர்மபுரி | 10 | 2 |
| 9. | கடலூர் | 10 | 2 |
| 10. | சிவகங்கை | 10 | 2 |
| 11. | விருதுநகர் | 10 | 2 |
| 12. | மதுரை | 10 | 2 |
| 13. | சேலம் | 10 | 2 |
| 14. | திருவண்ணாமலை | 10 | 2 |
| 15. | காஞ்சிபுரம் | 10 | 2 |
| 16. | சென்னை | 5 | 2 |
| 17. | திருவள்ளூர் | 5 | 2 |
| 18. | நீலகிரி | 5 | 2 |
| 19. | விழுப்புரம் | 5 | 2 |

| | | | |
|---|---|---|---|
| 20. | நாமக்கல் | 5 | 2 |
| 21. | திருவாரூர் | 5 | 2 |
| 22. | பெரம்பலூர் | 5 | 2 |
| 23. | தேனி | 5 | 2 |
| 24. | திண்டுக்கல் | 5 | 2 |
| 25. | ஈரோடு | 5 | 2 |
| 26. | தஞ்சாவூர் | 5 | 2 |
| 27. | புதுக்கோட்டை | 5 | 2 |
| 28. | கரூர் | 5 | 2 |
| 29. | நாகப்பட்டினம் | 5 | 2 |
| | மொத்தம் | 320 | 70 |

கே.எஸ்.ஸ்ரீபதி,
அரசு செயலாளர்.

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர்